අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

48 T I,II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය	I, II
தமிழ் இலக்கிய நயம்	**I, II**
Appeciation of Tamil Literary Texts	**I, II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීමේ කාලය - මිනිත්තු 10යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : .....

சுட்டெண் சரியானது என உறுதிப்படுத்துகிறேன்.

.....
நோக்குநரின் சிற்றொப்பம்

அறிவுறுத்தல்கள் :

- **வினாத்தாள் I, வினாத்தாள் II** ஆகியவற்றுக்கு விடையளித்து, முழுநேரம் முடிவடைந்த பின்னர் அவற்றை வேறுவேறாக கையளிக்கவும்.
- **வினாத்தாள் I** இற்குரிய விடையை **இவ்வினாத்தாளிலேயே** எழுத வேண்டும். **இதற்காக வழங்கப்பட்டுள்ள இடத்தை மாத்திரம் பயன்படுத்தவும்.**
- **வினாத்தாள் II** இற்கான விடையை எழுதுவதற்கு விடை எழுதும் புத்தகத்தைப் பயன்படுத்தவும்.
- **வினாத்தாள் I** இற்கு **40** புள்ளிகளும் **வினாத்தாள் II** இற்கு **60** புள்ளிகளும் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்
வினாத்தாள் I

வினா எண்		**புள்ளிகள்**
1		
2		
மொத்தம்	இலக்கத்தில்	
	எழுத்தில்	

..... முதலாம் பரீட்சகர்	..... குறியீட்டு எண்
..... இரண்டாம் பரீட்சகர்	..... குறியீட்டு எண்
..... எண்கணிதப் பரிசோதகர்	..... குறியீட்டு எண்
..... பிரதம பரீட்சகர்	..... குறியீட்டு எண்

(பக் 2 ஐப் பார்க்க)

Past Papers Wiki

தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் I

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

1. **(i)** தொடக்கம் **(v)** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள விடயத்தை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமான விடை** தருக.

(i) "பார்குலாம் முழு வெண் திங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தினாளை,
இறைமுகம் எடுத்து நோக்கி,
தார்குலாம் அலங்கல் மார்பன்,
தாயரை நினைந்து நைந்தான்"

(அ) தாரையின் தோற்றம் எவ்வாறு கூறப்படுகிறது?

……

……

(ஆ) இங்கு வெளிப்படும் இலக்குமணனின் சிறப்பு யாது?

……

……

(ii) "கயிறுகளை மேயவிட்டு
கொளுத்தன மாடுகள்
பூசணி"

(அ) இத்தொடரில் வெளிப்படுத்தும் விடயம் யாது?

……

……

(ஆ) இங்கு 'கயிறுகள்' என்ற குறியீடு யாரைக் குறிக்கின்றது?

……

……

(iii) "பூவார்சோலை மயில் ஆலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகசைய நடந்த எல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி காவேரி"

(அ) இங்கு காவேரியின் வளம் எவ்வாறு கூறப்படுகிறது?

……

……

(ஆ) சோழ மன்னனின் சிறப்பு யாது?

……

……

(iv) வார்த்தைகளின் கனிவு குழைந்தது. நான்கு நாள்களுக்கு முன் தொலைந்து போன ஈரம் பாத்துமாவின் முகத்தில் முழு நிலவாய் ஒளிர்ந்தது. சிறகொடிந்த பறவை, பாறை இடுக்குகளில் உறைந்து உயிரைப் பத்திரப்படுத்துவதைப் போல், கிழவியின் கடிதத்தையும் தீர்க்கமான நெஞ்சையும் கெட்டியாக இறுக்கிக் கொண்டேன்.

(அ) பாத்துமாவிடம் ஏற்பட்ட மனமாற்றம் எவ்வாறு விபரிக்கப்படுகிறது?

…….

…….

(ஆ) இதில் பயின்றுள்ள அணியை இனங்கண்டு, விளக்குக.

…….

…….

(v) எதற்கும் எனது காயங்கள் ஆறட்டும். இன்னொரு முறை முயற்சித்துப் பார்க்கலாம். அதுவரை இந்தத் தீவே எனக்குப் பாதுகாப்பு. எவ்வளவு சுதந்திரமான தீவு இது. சொல்லாலும் சிரிப்பாலும் காயப்படுத்துகிற எதிரிகள் இங்கு வர அனுமதியில்லை. எனக்கா ஒன்றும் இல்லை. எவ்வளவு பரந்த ஆகாயம் அதன் கீழ் தவழ்ந்து கொண்டிருக்கும் வெள்ளை மேகங்கள். எவ்வளவு அழகு.

(அ) தீவைத் தனது பாதுகாப்பிற்குரியதாக கதை சொல்லி, கருதக் காரணம் யாது?

……..

……..

(ஆ) இயற்கை, கதை சொல்லிக்குத் துணையாக அமையுமாற்றைக் குறிப்பிடுக?

……..

…….

(4 × 5 = 20 புள்ளிகள்)

2. கீழ்க்காணும் **உரைப்பகுதியை** அல்லது **செய்யுட்** பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

'வாழ்க்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும் (Survival of the fittest)' என்றார் டார்வின். ஆனால் சீன தத்துவஞானி கன்.ூஷியஸோ, 'மென்மையானவையே நீண்ட நாள் வாழும்' என்கிறார். கன்.ூஷியஸ் மரணப்படுக்கையில்' இருந்தார். படுக்கையைச் சுற்றி அவருடைய சீடர்கள் கண்களில் நீரோடு நின்று கொண்டிருந்தனர். சீடர் ஒருவர் தழுதழுத்த குரலில், 'குருவே! கடைசியாக எங்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்' என்றார். கன்.ூஷியஸ் தம் வாயைத் திறந்து காட்டி, 'என் வாயில் என்ன தெரிகிறது, பார்' என்றார்.

சீடர் வாய்க்குள் பார்த்துவிட்டு, 'நாக்குத் தெரிகிறது' என்றார். 'பற்கள் இருக்கின்றனவா?' என்று கேட்டார் கன்.ூஷியஸ். 'இல்லை' என்றார் சீடர். 'இதிலிருந்து என்ன தெரிகிறது?' என்று கேட்டார் கன்.ூஷியஸ். 'எனக்கு ஒன்றும் தெரியவில்லை நீங்களே சொல்லிவிடுங்கள்' என்றார் சீடர்.

'நாக்கு மென்மையானது. பல் வலிமையானது. நாக்கு நான் பிறந்ததிலிருந்து இருக்கிறது. பல் பிறகு தான் முளைத்தது. வயது முதிர முதிர என் பற்கள் விழுந்து விட்டன. நாக்கு அப்பிடியே இருக்கின்றது. நான் சாகும் வரை அப்பிடியே இருக்கும். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே நீங்கள் மென்மையானவர்களாக இருங்கள். நீண்ட நாள் வாழ்வீர்கள். இது தான் உங்களுக்கு என் கடைசிச் செய்தி' என்றார்.

அவர் ஆவி பிரிந்தது. கன்.்பூஷியஸின் பார்வை (Observation) அற்புதமானது. அது இயற்கையின் இரகசியங்கள் ஒன்றைப் பார்த்துவிட்டது. மென்மையானது சீக்கிரம் அழிந்துவிடும். வன்மையானது அழியாது என்பது தான் பொது நம்பிக்கை. வயதானால் பற்கள் விழுந்துவிடுகின்றன. அவை அப்படி விழுவதற்குக் காரணம் அவற்றின் வலிமையே. நாக்கு அப்பிடி விழுவதில்லை. காரணம் அதன் மென்மை.

நீர் மென்மையானது என்று நினைக்கின்றோம். ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்துவிடுகின்றது. வலிமையான அணைகளைத் தகர்த்துவிடுகிறது. ஊர்களையே அழித்துவிடுகிறது. நெருப்பு வன்மையானது. ஆனால் அந்த நெருப்பை மென்மையான நீர் அணைத்துவிடுகிறது. நெருப்பு அழியும். நீர் அழியாது. காற்று மென்மையானது. ஆனால் அது புயலானால் பெரிய மரங்களையும் சாய்த்துவிடுகிறது.

(i) டார்வின் மற்றும் கன்.்பூஷியஸ் ஆகியோர் வாழ்க்கை தொடர்பாக எவ்வாறு நோக்குகின்றனர்?

.....

.....

.....

.....

.....

(04 புள்ளிகள்)

(ii) இங்கு உலகின் பொது நம்பிக்கை எதுவெனக் கூறப்படுகின்றது?

.....

.....

.....

.....

.....

(04 புள்ளிகள்)

(iii) கன்.்பூஷியஸ் இறுதியாகக் கூறும் அறிவுரை யாது?

.....

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

(iv) 'மென்மையே வாழும்' என்பது இயற்கையை ஆதாரங்காட்டி எவ்வாறு நிரூபிக்கப்படுகின்றது?

.....

.....

.....

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

அல்லது

‘ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்’.
நேசமாமரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத் தீர் இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்;
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து;
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
போற்றுவாள் அந்ந நல்லுயிர் தன்னை;
அன்பெனும் மரியா மக்த லேநா
ஆஹா! சாலப் பெருங்கிளி யி.ந்தே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லி.ந்து பயின்றிட லாகும்.

(i) நாம் அகந்தையை ஒழிப்பதனால் அடையத்தக்க நற்பேறுகளாக இங்கு கூறப்படுவனவற்றை விளக்குக.

.....

.....

.....

.....

.....

.....

(04 புள்ளிகள்)

(ii) யேசுகிறிஸ்து மீது மரியாமக்தலேநா கொண்ட அன்பு வெளிப்படுமாற்றை தெளிவுறுத்துக.

.....

.....

.....

.....

.....

.....

.....

(04 புள்ளிகள்)

(iii) யேசுகிறிஸ்து பற்றி பாரதியாரின் சித்திரிப்பை விபரிக்குக.

.....

.....

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

(iv) இங்கு கையாளப்பட்டுள்ள உருவக அணிகளை இனங்கண்டு விளக்குக.

.....

.....

.....

.....

.....

.....

.....

(06 புள்ளிகள்)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

48 T I,II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය **I, II**
தமிழ் இலக்கிய நயம் I, II
Appeciation of Tamil Literary Texts I, II

தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் II

- பகுதி **II** **1ஆம் வினாவுக்கும்** ஏனைய **2, 3, 4, 5** ஆகிய வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்குமாக, மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- தரப்படும் விடைப்புத்தகத்தில் விடைகளை எழுதி, வேறாக கையளிக்கவும்.
- பகுதி **II** ற்கு **60** புள்ளிகள் வழங்கப்படும்.

1. பின்வரும் செய்யுள் பகுதிகளை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் **200** சொற்களில் எழுதுக.

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனைக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

*

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு.

*

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழிநான்

*

உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல் - பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்.

*

நேற்றிராவந் தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றூரான் என்று விடாயென்றேன் - ஆற்றியே
கஞ்சிகுடி யென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து.

(i) தலைவன் - தலைவியரிடையிலான சிற்றின்பக் காதல்

(ii) இறைவன் மீது கொண்ட பேரின்பக் காதல்

(iii) அகத்திணைப் பாடலில் தலைவியின் அழகு நலன்கள்

(iv) தலைவனின் ஏக்கமும் எதிர்பார்ப்பும்

(v) கையாளப்பட்டுள்ள அணிப்பயன்பாடு

(5 × 6 = 30 புள்ளிகள்)

2. **தாய்ப்பசு** சிறுகதையில்

(i) தாய்மையின் மேன்மை

(ii) காளையின் வன்மம்

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

3. (i) தூர்

(ii) புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

ஆகிய கவிதைகளில் பெண்கள் மீதான அடிமைத்தனம் புலப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

4. **'மின்மினிகளால் ஒரு தோரணம்'** எனும் பகுதியில்

(i) ஹைக்கூ கவிதை பற்றிய அறிஞர்களது கருத்துகள்

(ii) வறுமையும் அதனாலான துயரமும்

எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

5. **கிட்கிந்தைப் படலத்தில்**

(i) தாரையின் ஆளுமை

(ii) தாரையின் அழகு

என்பன நயம்பட எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

48 T I,II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය	I, II
தமிழ் இலக்கிய நயம்	I, II
Appeciation of Tamil Literary Texts	**I, II**

விடைத்தாள்

பகுதி - I

1.

(i) (அ) பகற் பொழுதில் தோன்றும் சந்திரன் ஒளி குறைந்து காணப்படுவதைப் போன்று ஒளி மழுங்கிய முகத்துடன் காணப்படுதல்.

(ஆ) மலர் மாலைகள் அசைந்தாடும் ஒளி வீசும் மார்பினை உடையவன்.

(ii) (அ) முதலாளி வர்க்கத்தினரால் தொழிலாளர்கள் சுரண்டப்படுதல்.

(ஆ) தொழிலாளர்கள் / ஒடுக்கப்பட்டவர்கள் / கீழ்த்தட்டு மக்கள்.

(iii) (அ) பூக்கள் மிகுந்த சோலையில் மயில்கள் மகிழ்ந்து ஆடவும் குயில்கள் இசை விரும்பி இசைபாடவும் விரும்பத்தக்க மலைகள் அருகே அசைந்து செல்லும் வளமிக்கது.

(ஆ) பகைவர்களுக்கு அச்சத்தை தருகின்ற வேலினை உடையவன்.

(iv) (அ) வார்த்தைகளில் கனிவு குழைதல், அன்பு பிறந்தமையால் முகம் முழுநிலவு போல் தோன்றுதல்.

(ஆ) **உவமை அணி**
சிறகொடிந்த பறவை பாறை இடுக்குகளில் உறைந்து உயிரைப் பத்திரப்படுத்துவதைபோல கிழவியின் கடிதத்தையும் தீர்க்கமான நெஞ்சையும் கெட்டியாக இறுக்கிக்கொண்டதாக கூறுதல்.

அல்லது

உருவக அணி
ஈரம் முழு நிலவாக உருவகிக்கப்படல்

(v) (அ) சொல்லாலும் சிரிப்பாலும் காயப்படுத்தும் எதிரிகளுக்கு அனுமதி இன்மை.

(ஆ) எவ்வளவு பரந்த ஆகாயம், அதன் கீழ் தவழ்ந்து கொண்டிருக்கும் வெள்ளை மேகங்கள் எவ்வளவு அழகு எனத் இயற்கையை துணையாகக் கொள்ளுதல்.

(4 × 5 = 20 புள்ளிகள்)

2. (i)

- வலிமையானதுதான் வாழும் - டார்வின்
- மென்மையானததான் வாழும் - கன்பூசியஸ்.

(04 புள்ளிகள்)

(ii)

- மென்மையானது சீக்கிரம் அழிந்துவிடும்.
- வன்மையானது அழியாது

(04 புள்ளிகள்)

(iii) வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே நீங்கள் மென்மையானவர்களாக இருங்கள். நீண்டநாள் வாழ்வீர்கள்.

(06 புள்ளிகள்)

(iv)

- நீர் மென்மையானது. ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்துவிடும். வலிமையான அணைகளை தகர்த்துவிடும். ஊர்களையும் அழித்துவிடும்.
- நெருப்பு வன்மையானது அதனை மென்மையான நீர் அணைத்துவிடும்.
- மென்மையான காற்று புயலானால் பெரிய மரங்களை சாய்த்துவிடும்.

(06 புள்ளிகள்)

அல்லது

(i)

- தேவர் (யேசு) வந்து நமக்குள் புகுந்து கொள்வார்.
- அழிவுகள் இன்றி நம்மைத் தினமும் காப்பார்.

04 புள்ளிகள்)

(ii)

- யேசுபிரான் உயிர்த்தெழுந்ததை நேரில் காணல்.
- தன் பொன் பொலிந்த முகத்தினால் யேசுபிரானைப் போற்றுதல்.
- தனது நல்லறத்தின் விளைவே யேசுபிரான் எனக் குறிப்பிடுதல்.

(04 புள்ளிகள்)

(iii)

- யேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டு இறந்தமை.
- அவர் மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்தமை.
- நம் அகந்தையை கொன்றுவிட்டாள் நம்மை நித்தமும் காப்பார்.
- கொடையில் சிறந்தவராக சிறப்பிக்கப்படல்

(06 புள்ளிகள்)

(iv)

- உண்மை என்ற சிலுவை
  - உண்மை சிலுவையாக உருவகிக்கப்படல்
- ஆணித்தவம்
  - தவம் ஆணியாக உருவகிக்கப்படல்
- நல்லறம் யேசு கிறிஸ்து
  - நல்லறமாக யேசுகிறிஸ்து உருவகிக்கப்படல
- வண்மைப் பேருயிர் யேசுகிறிஸ்து
  - யேசு கிறிஸ்து உயிராக உருவகிக்கப்படல்
- வானமேனி - யேசு கிறிஸ்து வானமேனியாக உருவகிக்கப்படல்

(06 புள்ளிகள்)

பகுதி - II

1.

(i) **சுனைப்பூக் குற்று...**

- இயற்கை புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தனக்குதானே சொல்வதனூடாக சிற்றின்பக் காதலை வெளிப்படுத்தல்.
- தலைவி தன்னுடைய காதலை அறிந்தாலோ இல்லையோ என தலைவன் ஏக்கத்தோடு உரைத்தல்.
- நடுச்சாமத்தின் பின் துயிலும் யானைப்போல் பெருமூச்சுவிட்டேன். என் உள்ளம் மீண்டும் அவளிடமே சென்றுவிட்டது எனக் கூறுதல்.

சிரல்வாய் வனப்பின...

- செயல் முற்றுப்பெற்று மீளுகின்ற தலைமகன் பாகனுக்கு கூறுவதன் மூலம் சிற்றின்பக் காதல் வெளிப்படல்.

உள்ளம்போய் நாண்போய்...

- தமயந்தியின் காதல் அதிகரிக்க உள்ளம், வெட்கம் முதலிய யாவற்றையும் இழந்து உயிரும் தளரப்பெற்றான் எனல்.

(06 புள்ளிகள்)

(ii) **மத்தளம் கொட்ட...**

- கண்ணனை காதலனாக கருதிய ஆண்டாள் கனவிலும் நனவிலும் கண்ணனைக் கண்டு அவனையே கைத்தலம் பற்றுவதாக கனவு காண்கிறாள்.
- பரம்பொருளே தன்னை ஆட்கொள்வதாக கூறுவதன் மூலம் பேரின்பக்காதல் வெளிப்படல்.

நேற்றிரா...

- கனவிலும் ஏகம்பரநாதர் தனது கையைப் பற்றியதாகவும் அவரை களித்திருந்து விட்டுப் போகும்படி தான் வேண்டியதாகவும் ஆயின் அவர் மறைந்துவிட்டார் எனக் கூறுவதன் மூலம் இறையன்பை தேடும் பேரின்பக்காதல் வெளிப்படல்.

(06 புள்ளிகள்)

(iii)

- அழகிய பூப்போன்ற கண்களையுடையவள்.
- சிறந்த செல்வத்தையுடைய மழை போன்ற குளிர்ந்த கண்களையுடையவள்.
- சிலவாகிய மொழியினையுடையவள்.
- வீமனுடைய திருமடந்தை.
- நீண்ட கண்களையுடையவள்.
- இளந்தளிர் போன்றவள்.

(06 புள்ளிகள்)

(iv) **ஏக்கம்**

- தலைவன் தலைவி மீது தீராத காதல் கொண்டவன்.
- தலைவியை நினைத்து தலைவன் பெருமூச்சு விடுதலும் தலைவனின் உள்ளம் மீண்டும் மீண்டும் அவளிடம் செல்வதாக கூறல்.
- விரைவாக தலைவியை அடையவேண்டும் என்ற ஏக்கம்.
- தலைவியின் அழகு தலைவனுக்கு அவளைப் பற்றிய நினைவை தூண்டுவதானால் ஏற்படும் ஏக்கம்.

(03 புள்ளிகள்)

எதிர்ப்பார்ப்பு

- தலைவி தன்னோடு இணையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு.
- தலைவி தன்னுடைய காதலை உணரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு
- தலைவியுடன் மகிழ்ச்சியாக இணையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு.
- அவளை தன் வாழ்வின் இன்பமாக பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பு.

(03 புள்ளிகள்)

(v) **உவமையணி :**

பூங்கட்பேதை

உவமானம் :- பூ
உவமேயம் :- கண்
பொதுத்தன்மை :- அழகு

பாணாள் பள்ளி யானை உயிர்த்தென் உள்ளம்
பின்னுந் தன்னுழை யதுவே

உவமானம் :- நடுச்சாமத்தில் துயிலும் யானை
உவமேயம் :- பெருமூச்சு விடும் தலைவன்
பொதுத்தன்மை :- பெருமூச்சுவிடல்

Past Papers Wiki

மழை மதர்க்கண் சின்மொழி பேதையூர்...

உவமானம் :- மழை
உவமேயம் :- கண்
பொதுத்தன்மை :- குளிர்ச்சி /அழகு

சிரல்வாய் வனப்பின்வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவுந் தகைந்தன

உவமானம் :- சிச்சிலிக்கும் குருவியின் வாய்
உவமேயம் :- செம்முல்லைப் பூக்கள்
பொதுத்தன்மை :- அழகு

வேகின்ற மென்தளிர் போல

உவமானம் :- வேகின்ற மென்தளிர்
உவமேயம் :- தமயந்தியின் ஆவி
பொதுத்தன்மை :- துன்பம்

சிலேடையணி:

களித்தின்று போவென்றேன்

- ✓ களி தின்று போ எனக் கூறல்.
- ✓ (இன்று என்னுடன் களித்திருந்து) மகிழ்ந்திருந்து விட்டுப் போ எனக் கூறல்.

கஞ்சிகுடி என்றான்

- ✓ தான் காஞ்சியில் குடியிருப்பவன்.
- ✓ கஞ்சியை ஆற்றிக்குடி

(06 புள்ளிகள்)

2.

(i) தாய்ப்பசு சிறுகதையில் தாய்மையின் மேன்மை

- குமரனும் கன்றுக்குட்டியும் ஒன்றாக குலவுவதைக் கண்டு மகிழ்தல்.
- குமரனையும் தன் மகனாக எண்ணுதல்.
- குமரனுக்கும், கன்றுக்கும் நாக்கால் மாறி மாறி தடவி ஒரே மாதிரியான அன்பை வெளிப்படுத்தல்.
- தன்னுடைய பால்தான் குமரனின் குருதியில் ஓடுவதாக பெருமிதமடைதல்.
- பொல்கலை தட்டிவிட்டு தன் துயரை வெளிப்படுத்தல்.
- காளை மாடு குமரன் மீது பாயும் போது அதனை காப்பாற்றுதல்.
- காளையிடம் "ஏன் உனக்கு இவ்வளவு வெறி" எனக் கூறுவதன் மூலம் தாயின் மேன்மை வெளிப்படுகின்றது.

(07 புள்ளிகள்)

(ii) காளையின் வன்மம்

- கன்றுக்குட்டியின் கதறலைக் கேட்டு காளை அடித்தொண்டையிலிருந்து குரல் கொடுத்தல்.
- மூச்சுவிடுவதற்கு பதிலாக நெருப்ப தனலைக் கக்குதல்.
- அப்பசுவின் கதறலுக்கு சுவருக்கு அப்பால் நின்று எதிரொலி கொடுத்தல்.
- குமரனைத் தாக்க நாலுக்கால் பாய்ச்சலில் தெருவின் நடுவே வருதல்.
- பழிவாங்கும் எண்ணத்தோடு ஓடல்.

(08 புள்ளிகள்)

3. **(i) தூர்**

- அம்மா கதவுகளின் பின்னிருந்துதான் அப்பாவோடு பேசுகிறாள் என்பதன் மூலம் பெண்ணின் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படல்.
- பெண்களின் துன்பங்கள் கண்டு கொள்ளப்படாதிருத்தல்.
- அப்பா தன் வாழ்வின் கடைசிவரை, தன் மனக்கிணற்றுள் சேறு போல் இருந்த பெண் குறித்த கீழான அபிப்பிராயத்தை அகற்றிவிடவில்லை என்று காட்டப்படல்.
- பெண்கள் வெளிப்படையாக கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்படாமை.

(07 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(ii) புதுமைப்பெண்ணாய் மாறிடுவோம்

- பெண்கள் அடிமைத்தனத்திற்குள் சிக்க வைக்கப்பட்டிருத்தல்.
- பெண் உரிமைச் சிந்தனைகள் மறுக்கப்பட்டிருத்தல்.
- பெண்களுக்கான கல்வி உரிமை மறுக்கப்படல்.
- சாதி, சமய ரீதியாக பெண்கள் தாழ்வானவர்கள் என்ற நிலை காணப்படுதல்.
- பெண்களுக்கென நீதியை பேசுகின்ற தனியான இலக்கணங்களை வகுத்திருத்தல்.

(08 புள்ளிகள்)

4. **(i) ஹைக்கூக் கவிதை பற்றிய அறிஞர்களின் கருத்துகள்**

- 'சிந்தனை எனும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறிய கல்' போன்றது - சுஜாதா
- 'தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு' – கென்னத் யசூதா
- 'சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம்' – கவிக்கோ அப்துல் ரகுமான்
- 'பாதியாய் திறந்த கதவு அதன் வழி நம்மை அழைக்கும் கைச்சைகை - ஆர்.எம். பிளீத்
- 'கவிஞன் இறங்கிக் கொள்ள வாசகன் அதன் மீது பயணம் தொடர்வான்' - ரோமாண்ட் ரோசலிப்
- 'கவிதை உலகின் புதிய மழலை' - மேலாண்மை பொன்னுசாமி
- '5, 7, 5 அசைகள் கொண்ட ஜப்பானிய கவிதை' - சேம்பர்ஸ் அகராதி

(06 புள்ளிகள்)

(ii) வறுமையும் அதனாலான துயரமும்

பாஷோவின் கவிதை

- ✓ அரிசி வாங்குவதற்கு கூட வசதியற்ற வறுமை (பொருளாதார நெருக்கடி)
- ✓ உணவின்றி பசியுடன் வாழவேண்டிய துயரம்

ஸாய்காகு கவிதை

- ✓ பொருளாதாரத்தை பெறமுடியாத வறுமை.
- ✓ வாழ்வில் போதியளவு உணவு இன்மை.
- ✓ இலவாக பெறக்கூடியவையும் பெறமுடியாத நிலை.

மசாஹிடே கவிதை

- ✓ வீடு தீப்பற்றி எரிந்ததால் வீடற்ற நிலைக்குத் தள்ளப்படல்.
- ✓ வீட்டுக்கு கூரை இல்லாத நிலை.

சு.முரளிதரன் கவிதை

- ✓ அடிப்படை வசதிகளற்ற தொடர் வீடுகள் (லயன்).

ரைஸான் கவிதை

- ✓ வயலில் கடினமாக உழைக்கும் பெண்களின் நிலை.
- ✓ உடல் உழைப்பு, சிரமங்கள் நிறைந்த வாழ்க்கை.

(09 புள்ளிகள்)

5.

(i) தாரையின் ஆளுமை

- வானர வீரர்கள் தாரையிடம் முதலில் ஆலோசனை கேட்டல்.
- அனுமன் கூறிய ஆலோசனையைச் செயற்படுத்தியமை.
- இலக்குமணனின் உள்ளக் கருத்தினை அறிவதற்காக அவனது வருகையைப் புகழ்ந்து கூறியமை.
- தனது விதவைக் கோலம் தணித்துத் தெரியவேண்டும் என்பதற்காகவே அதிக ஆபரணங்களைச் சூடிய பெண்களோடு சென்று இலக்குமணனை வழிமறித்தல்.
- வானர வீரர்களை 'உளது' எனச் சுட்டிக்கூறி அடையாளப்படுத்துதல்.
- இலக்குமணனின் மனதை மாற்றியமை.

(08 புள்ளிகள்)

(ii) தாரையின் அழகு

- இயற்கையில் நறுமணம் கமழும் நீண்ட கூந்தலை உடையவள்.
- அழகிய தோள்களை உடையவள்.
- தாய்மையான மனத்தினை உடையவள்.
- நீண்ட கண்களை உடையவள்.
- இசையினை விட இனிய வார்த்தைகளைப் பேசுபவள்.
- பாக்கு மரம் போன்ற அழகு.

(07 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank